புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

==========================================================

# வஞ்சிக்காண்டத்தில் பழந்தமிழர்களின் போர்முறை

==========================================================

**ஆய்வாளர்**
**கி. வான்மதி,**
*முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர்,*
*(Ref. No. 32725/Ph.D.K8/Tamil/Part time/October 2015)*
*அரசு கலைக் கல்லூரி,*
*பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது*
*திருச்சிராப்பள்ளி -620 022.*

**நெறியாளர்**
**முனைவர் பெ. பகவத்கீதா,**
*உதவிப் பேரசிரியர்,*
*தமிழாய்வுத்துறை,*
*அரசுகலைக் கல்லூரி,*
*பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது,*
*திருச்சிராப்பள்ளி -620 022.*

==========================================================

**ஆய்வுச் சுருக்கம்**

**"வஞ்சிக்காண்டத்தில் பழந்தமிழர்களின் போர்முறை"** என்னும் தலைப்பில் முடியுடை மூவேந்தர்களுள் ஒருவரான சேரன் செங்குட்டுவன் மேற்கொண்ட போர்முறை பற்றி காணலாம். இவ்வேந்தன் காப்பியத் தலைவியான கண்ணகிக்கு சிலை எடுக்க வடநாடு நோக்கிச் செல்லுகிறான். போரானது இப்படி தான் நடைபெற வேண்டும் என்று வரையறை செய்து அதன்படி பல உத்திகளைக் கையாண்டு, நீதிநெறி வழுவாமல் மேற்கொள்கின்றான் என்பதையும் இறந்தப் பிறகும் அவ்வேந்தனின் புகழானது இன்றளவும் மக்கள் உதட்டில் உதித்துக் கொண்டிருப்பதற்குக் காரணமாக விளங்குகின்ற கண்ணகிக்கு சிலை எடுத்தல் நிகழ்வும், அந்நிகழ்வுக்காக மாற்றானோடு போரிட்டு அவன் மேற்கொண்ட போர் முறையையும் இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் அறியலாம்.

**திறவுச் சொற்கள்**

வேந்தன், வஞ்சி, நடுகல், முரசு, சிலை, பகைவன், திறை, நிமித்தம்.

## முன்னுரை

மனிதகுலம் தோன்றிய காலந்தொட்டே போரானது தொடங்கியிருக்க வேண்டும். தம்முடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு இயற்கையோடும் தன்னை யொத்த மனிதனோடும் போராடி தான் பெற்றிருக்க வேண்டும். பண்டைத் தமிழகத்தில் என்னென்ன போர் நடைபெற்றது, எதற்காக நடைபெற்றது, அப்போரில் என்னென்ன உத்திமுறைகளைக் கையாண்டுள்ளனர், போரானது அறநெறிப்படி நடைபெற்றதா, இல்லையா, போர்புரிவதற்கு முன்னும் பின்னும் என்னென்ன செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று பல நிலைகள் இருந்தாலும், அவர்கள் தங்கள் போர் வாழ்வில் மேற்கொண்ட போர்முறையை விவரிப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

***"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்***

***புதுவது அன்று இவ்வுலகத் தியற்கை"***

***(ஞா. மாணிக்கவாசகன், பதி-2005, பா.எ-76)***

என்னும் புறநானூற்று பாடல் அடிகளும்,

***"கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு***

***முற்றோன்றி மூத்த குடி"***

***(பொ.வே. சோமசுந்தரனார் பதி-2000, சூ.வி. பாடல்-35)***

என்னும் புறப்பொருள் வெண்பாமாலை பாடல் வரிகளும் போரானது மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து தொடங்கியிருந்தாலும் அம்மனித இனம் தோன்றுவதற்கு முன்பே வீரமானது இம்மண்ணில் முளைத்திற்று.

அற்றைக் காலத்தில் நடைபெற்ற போரானது மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை போன்ற காரணங்களுக்காக மட்டும் அல்லாமல், பல காரணங்களுக்காகவும் நடைபெற்ற அப்போரில் அறம் என்ற ஒன்றை மட்டுமே காணமுடியும். அத்தைகய அறத்தையே உயிராக நினைத்து மதித்தவர்கள் நம் பழந்தமிழர்கள் என்றால் மிகையாகாது.

நாம் எந்த ஒரு செயலையும் தொடங்குவதற்கு முன் பல திட்டங்களை வகுத்து அதன்படி செயல்பட விழைவோம். அவ்கையில், பண்டைக் காலத்தில் பகைவர்கள் மீது போர்தொடுத்து செல்வதற்கு முன் பல முன்னேற்பாடு உத்திகளை மேற்கொண்டு செயல்படுவது வேந்தர்களின் தலையாய போர் முறையாகும்.

***அரவம்***

போர் என்றால் ஆரவாரம் மிக்கதாகவே காணப்படும். ஒவ்வொரு மறவர்களும் இசைக் கருவிகள் முழக்கத்துடன் பகைவரோடு போரிடுவதற்காக பெரும் ஆரவாரத்தோடு புறப்பட்டுச் செல்வர் என்பதை இலக்கண இலக்கிய நூல்கள் வழி அறிய முடிகின்றது.

சேரன் செங்குட்டுவன் வஞ்சி நகர் விட்டு படைகள் புடைசூழ முரசு முழங்க பெரும் ஆரவாரத்தோடு வடநோக்கிப் புறப்பட்டான் என்பதை,

***"தண்டத் தலைவரும் தலைத்தார்ச் சேனையும்***

***வெண்தலைப் புணரியின் விளிம்பு சூழ் போத***

***மலை முதுகு நெளிய நிலை நாடு அதர்பட***

***உலக மன்னவன் ஒருங்குடன் சென்றாங்கு”***

***(ஞா. மாணிக்கவாசகன், 2016, பா.அடிகள்.80-83)***

*என்ற சிலப்பதிகாரத்தின் பாடலடிகள் வஞ்சிப்படை புறப்பட்ட நிலையை கூறியுள்ளது.*

***முரசு முழங்குதல்***

*பழங்காலத் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் தம் நாட்டில் என்ன நிகழ்வு நடைபெற இருந்தாலும் அந்நிகழ்வினை முரசறைந்து தம் மக்களுக்கு தெரியப்படுத்துவர்.*

*சேரன் செங்குட்டுவன் காவியத் தலைவி கண்ணகிக்கு சிலை எடுப்பதற்காக இமயம் வரை செல்கின்றான் என்பதை, அறிவிப்பதன் மூலம் பகைவர்க்கு எச்சரிக்கையும் விடுக்கின்றான். எவ்வாறு என்றால் எம் வேந்தன் படைகள் சூழ வரும் போது வடதிசையில் உள்ள மன்னர்களே எம் வேந்தனோடு போரிட துணியாமல் கப்பமாக திறைப்பொருளை செலுத்தி அவருக்கு அடிப்பணியுங்கள், இல்லையென்றால் தோல்வியைத் தழுவீர்கள என்று முரசறிவிப்போன் யானையின் எருத்தின் மேல் முரசினை ஏற்றி தானும் அமர்ந்து நகரமெங்கும் உள்ள வீதிகளில் முரசறிவிக்கின்றான் என்பதன மூலம்,*

*பழங்காலத் தமிழக வேந்தர்கள் முரசறிவித்தப் பின்னர் தான் மாற்றான் மீது படையெடுத்துச் செல்வான் என்ற செய்தியை சிலம்பு பாடல் வழி காணலாம்.*

***“வில் தலைக் கொண்ட வியன்பேர் இமயத்து ஓர்***

***கற்கொண்டு பெயரும் எம காவலன் ஆதலின்***

***வடதிசை மருங்கின் மன்னர் எல்லாம்***

***இடுதிறை கொடுவந்து எதிரீர் ஆயின்***

… … … … …

***இறைஇகல் யானை எருத்தத்து ஏற்றி***

***அறைபறை எழுந்ததால் அணிநகர் மருங்கு என”***

***(ஞா. மாணிக்கவாசகன், 2016, பா.அடிகள்.118-121)***

**பெருஞ்சோறு அளித்தல்**

*போரில் ஈடுபடும் மறவர்களுக்கு வீர உணர்ச்சியைத் தூண்டும் வகையில் கள் வழங்குதல் போல, வஞ்சி வேந்தன் மாற்றானோடு போரிட்டு வெற்றி வாகை சூடுவதற்குக் காரணமாக இருக்கக் கூடிய மறவர்களுக்கு பெருஞ்சோற்று படைத்தளித்தான்.*

*இவ்வாறு கள், சோறு ஆகியவற்றை வீரர்களுக்கு வழங்குவது பண்டைத்தமிழர் மேற்கொண்ட போர் முறைகளில் ஒன்றாகும்.*

*படைமறவர்களுக்கு பெருஞ்சோறு வழங்கும் முறையை,*

***“திருந்தார் தெம்முனை தெவகுவர் இவரெனப்***

***பெருஞ்சோ றாடவர் பெறுமுறை வகுத்தன்று”***

***(பொ.வே. சோமசுந்தரனார், 2000, நூ.எ-23)***

*என்னும் புறப்பொருள் வெண்பாமாலையும்,*

***“பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்”***

***(இளம்பூரணர், 2000, நூ.எ-65)***

*என்னும் தொல்காப்பியமும் எடுத்துரைத்துள்ளன.*

*மாபெரும் இதிகாசங்களுள் ஒன்று மகாபாரதம். இம்மகாபாரதத்தில் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் பெரும் போர் மூண்டது. அப்போரில் அவ்விருவர்களின் படைகளுக்கும் பெருஞ்சோறு அளித்து பேருதவி புரிந்தான். சேரன் செங்குட்டுவன் என்பதை,*

***“ஓர்ஐவர் ஈரைம் பதின்மர் உடன்று எழுந்த***

***போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த***

***சேரன் பொறையன் மலையன்”***

***(ஞா. மாணிக்கவாசகன், 2016. பா.அடிகள்.25-27)***

*என்னும் பாடல் அடிகளும்,*

***“பெருஞ்சோறு பயந்த திருந்து வேல் தடக்கை”***

***(ஞா. மாணிக்கவாசகன், 2016, பா. அடிகள்.62,63)***

*என்னும் பாடல் வரியும்,*

***“அரும்படைத் தானை அமர் வேட்டுக் கலித்த***

***பெரும் படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்த”***

***(ஞா. மாணிக்கவாசகன், 2016, பா. அடிகள்.48,49)***

*என்னும் பாடல் வரிகளும்,*

***“குலவுவேல் சேரன் கொடைத்திறம் கேட்டு***

***வண்டமிழ் மறையோர்க்கு வானுறை கொடுத்த”***

***(ஞா. மாணிக்கவாசகன், 2016, பா. அடிகள்.62,63)***

*என்னும் வரிகளும் இதனை உணர்த்தும்,*

*இவ்வாறு பண்டைத் தமிழகத்தில் போர் நடை பெறுவதற்கு முன் வீரர்களுக்கு பெருஞ்சோறு வழங்குவது என்பது அவர்கள் மேற்கொண்ட போர் நெறியாகும்.*

***திறைப்பொருள்***

பகைநாட்டு வேந்தன் வெற்றி பெற்ற வேந்தனுக்கு செலுத்தும் பொருளே திறைப்பொருள். தோல்வியுற்ற வேந்தன் மட்டுமன்றி வலிமையுடைய அரசனின் படை வலிமைக்கு அஞ்சியும், தம் நாட்டையும் மக்களையும் காக்கும் பொருட்டும் பகையரசர்கள், வேந்தனுக்கு திறைப்பொருளைச் செலுத்தி அவர்களுக்கு அடி பணிந்து நடப்பர் என்பதை சங்க இலக்கிய நூல்களும், புறப்பொருள் இலக்கண நூல்களும் குறிப்பிட்டுள்ளன.

மூவேந்தர்களுள் ஒருவனான சேரன் செங்குட்டுவனின் படைவலிமையைக் கண்ட பகைவர்கள் அவ்வேந்தன் தம்மீது போரிடாமல் இருப்பதற்காக திறைப்பொருளை கொண்டு வந்து வணங்கினர் என்பதை,

***"திறை சுமந்து நிற்கும் தெவ்வர் போல"***

***(ஞா. மாணிக்கவாசகன், 2016 பா.அடி-36)***

என்னும் பாடல் வரி மூலம் அறியலாம்.

***நிமித்தம் பார்த்தல்***

பழங்காலத் தமிழர்கள் வீரத்தில் சிறந்து விளங்கினாற் போன்று நம்பிக்கைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாக இருந்துள்ளனர். எந்த ஒரு செயலையும் தொடங்குவதற்கு முன்பு நல்ல நாள், நல்ல நேரம், சகுனம், விரிச்சி கேட்டல் ஆகியவற்றை சார்நது வாழ்ந்துள்ளனர்.

இந்நிலவுலகை ஆளும் அரசர்கள் அறநெறிவழுவா போரை மேற்கொள்வதற்கு முன் நாழிகைக் கணக்கரிடம் சென்று நல்ல நாள், நேரம் ஆகியவற்றைக் கணித்து போருக்குச் சென்றுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

சேரன் செங்குட்டுவன் வடதிசைநோக்கிப் புறப்படுவதற்கு முன்பு கோள்நிலைகளையும் ராசிகளையும் கற்றுணர்ந்த சோதிடன் கூறியதைக் கேட்டு தம் படை பரிவாரங்கள் புடை சூழ போருக்குப் புறப்பட ஆய்த்தமானான் என்பதை சிலப்பதிகாரம் பாடல் வரிகள் உணர்த்தும்.

***"இருநில மருங்கின் மன்னர் எல்லாம் நின்***

***திருமலர்த் தாமரை சேவடி பணியும்***

***வாளும் குடையும் வடதிசை"***

***(ஞா. மாணிக்கவாசகன், 2016 பா. அடிகள்.26-29, 33)***

என்னும் பாடல் அடிகளும்,

***"வெட்சி மலர் புனைய வெள்வாள் உழத்தியும்***

***வேண்டின் வேற்றூர்க்***

***காட்சியுள் காரி கூடிய குரல் இசைக்குத்***

***காரட்டும் போலும்"***

***(ஞா. மாணிக்கவாசகன் 2016 பா. அடிகள்.12-14)***

என்னும் பாடல் அடிகளும் உணர்த்தும்.

***வஞ்சினம் கூறல்***

*வஞ்சினம் என்பது பழிவாங்குதல், கோபம் எண்ணும் பொருளைக் குறிக்காமல், பகைவரோடு போரிட்டு வெற்றி பெறுவதற்காக அரசன் தமக்குள்ளே வீர உணர்வை தூண்டும் வகையில் சூளுரைத்து போரில் வெற்றி பெறுவதை குறிக்கும்.*

*தம் நாட்டின் மீது படையெடுத்து வந்த பகை வேந்தனை, தன் தாள் பணிந்து வணங்குமாறு போரிடுவேன் என்று சூளுரைப்பது வஞ்சினக் காஞ்சியாகும். இதனை,*

***"வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப***

***வஞ்சினங் கூறிய வகைமொழிந் தன்று"***

***(பொ.வே. சோமசுந்தரனர், 2000 நூ.எ-9)***

*என்னும் புறப்பொருள் வெண்பாமாலையும் எடுத்துரைக்கும்.*

*முடியுடை மூவேந்தர்களுள் ஒருவனான பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடிய புறநானூற்றுப் பாடல் இவ்வஞ்சினக் காஞ்சி துறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.*

***"உறுதுப்பு அஞ்சாது உடல் சினம் செருக்கிச்***

***சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை***

***அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு***

***ஒருங்கு அகப்படேன் என் ஆயின் பொருந்திய***

***என் நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது***

***கொடியன் எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்***

***குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக***

***(ஞா. மாணிக்கவாசகன் 2005, பா,அடி-72)***

*சேரன் செங்குட்டுவன் தம்மை இகழ்ந்து பேசிய வட நாட்டு அரசர்களான கனகவிசயரோடு போரிட்டு வென்று அவர்கள் தலையின் மீது கல்லை சுமந்து வரும்படி செய்வேன். இல்லையென்றால் இந்நாட்டில் வாழும் மக்கள் கொடுங்கோல் மன்னன் என்று கூறும் பழிக்கு உடையவனாக இருப்பேன் என்று வஞ்சினம் கூறுகின்றான்.*

***"எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தரூஉம்***

***வடதிசை மருங்கின் மன்னர் தம் முடித்தலைக்***

***கடவுள் எழுத ஓர் கற்கொண்டு அல்லது***

***வறிது மீளும் என வாய்வாள் ஆகில்***

***பகை அரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்***

***இடிநடுக்குறா உம் கோலேன் ஆக என"***

*(ஞா. மாணிக்கவாசகன், 2016 பா. அடிகள்.11-14,16)*

*என்னும் பாடல் அடிகளும் வலியுருத்துகின்றன,*

*நாடாளும் வேந்தர்கள் வஞ்சினம் கூறி பகைவரோடு போர் புரிநதுள்ளனர் என்பதன் மூலம் அவர்களது போர் வாழ்வில் மேற்கொண்ட போர் முறையை அறிய முடிகின்றது.*

***நடுகல்***

*போருக்கு அடிப்படையாகத் திகழ்கின்ற பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை ஆகியவற்றின் காரணமாக நடைபெற்ற போரில் வலிமையைக் கண்டு அஞ்சி புறங்கொடாமல் மார்பில் விழுப்புண் பட்டு இறந்த வீரர்களின் வீரத்தை சிறப்பிக்கும் பொருட்டு அவர்களின் நினைவாக நடப்படும் வீரக் கல்லை நடுகல் என்று சிறப்பிக்கப்படுகின்றது.*

*தொல்காப்பியர் வெட்சிக்குப் புறமாகிய கரந்தைத் திணையில் இடம் பெற்றுள்ள காட்சி, கால்கோள் போன்ற துறைகள் புறப்பொருள் வெண்பாமாலையில் கரந்தைத் திணையில் இடம் பெறவில்லை, அதற்கு மாறாக பொதுவியல் படலத்தில் இடம் பெற்றுள்ளது.*

***"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்***

***சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று"***

***இளம்பூரணர் (உ.ஆ 2000, தொல்- புறத்திணை, நூ.எ-63)***

*இந்நடுகல் வழிபாடானது வஞ்சிக் காண்டத்திலும் காணமுடிகின்றது.*

*இறந்தவர்களை தெய்வமாக வணங்கி வழிபடும் பழக்கம் நம் தமிழக மக்களிடையே நிலவி வருகின்ற வழக்கத்தை சங்க காலம் முதல் இக்காலம் வரை காண முடிகின்றது.*

*இறந்தவர்களின் நினைவாக கல் நடுவர். அக்கல்லை நடுவதால் நடுகல், நட்ட கல் என்றும் அழைக்கப்பெறும். அந்நடுகல்லில் இறந்தவர்களின் பெயர் வீரம் பற்றிய செய்தி இடம் பெற்றிருக்கும். இந்நடுகல்லானது போரில் வீரமரணம் அடைந்த மறவர்களுக்கும், வடக்கே நோன்பிருந்து இறந்தவர்களுக்கும் கரந்தைப் போரில் வீரமரணம் அடைந்த மறவர்களுடக்கும் நடப்பட்ட அக்கல்லை தெய்வமாக வணங்கி மயிற்பீலி சூடி, மலர்தூவி வழிபட்ட செய்தியை சங்க இலக்கியம் வாயிலாக அறியமுடிகின்றது. மேலும் இந்நடுகல்லின் சிறப்பை தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் எடுத்துரைத்துள்ளது.*

*நடுகல்லை நடுவதற்கு சிறப்பு வாய்ந்த கல்லைத் தேர்ந்தெடுத்தல், அக்கல்லை புனதநீரில் தூய்மை செய்தல், பிறகு நட்டு வழிபடுதல் போன்ற செய்தியையும் அறிய முடிகின்றது. மேற்கூறியது போலவே செம்மொழி நூல்களுள் ஒன்றான பெண்ணின் பெருமையை உலகிற்கு பறைசாற்றும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் நடுகல் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. கணவனையே தெய்வமாக நினைத்து வாழ்ந்த கண்ணகியின் பெருமையை உலகிற்கு உணர்த்தும் விதமாக மூவேந்தர்களுள் ஒருவனான சேரன் செங்குட்டுவன் தன் அமைச்சர்களுடன் கூடி ஆலோசித்து தெய்வத் தன்மை வாய்ந்து விண்ணுலகம் அடைந்த கண்ணகிக்கு சிலை எடுக்க இமயமலையில்*

*இருந்து கல் எடுத்து அவற்றை புனித ஆறுகளான கங்கையிலும் காவிரியிலும் தூய்மை செய்து வழிபட எண்ணினான் என்பதை*

***"வில்தலைக் கொண்ட வியன் பேர் இமயத்து***

***கல் கால் கொள்ளினும் கடவுள் ஆகும்***

***கங்கைப் பேர் யாற்றிவம் காவிரிப் புனலினும்***

***தங்கிய நீர்ப்படை தகவோ உடைத்து என"***

***(ஞா. மாணிக்கவாசகன் 2016)***

*என்னும் சிலப்பதிகார பாடல் வரிகள் உணர்த்தும்.*

*வலிமை மிக்க பாற்றானோடு போரிட்டு வீரமரணம் அடையும் மறவர்களை பெருமைபடுத்தும் விதமாக அவர்கள் நினைவாக நடப்படுகின்ற நடுகல்லானது சாதாரணமாக அமையாமல் மிகவும் சிறப்பு தன்மை வாய்ந்ததாகவே கருதப்படும். அவ்வகையில் சேரவேந்தன் கண்ணகிக்கு சிலை எடுக்க கல்கொண்டு வருவதற்காக இமயமலை நோக்கி புறப்படத் தயாரானான்.*

***"பொதியில் குன்றத்துக் கல்கால் கொண்டு***

***முதுநீர்க் காவிரி முன்துறைப் படுத்தல்***

***மறத்தகை நெடுவாள் எம் குடிப் பிறந்தோர்க்கு***

***சிறப்பொரு வரூஉம் செய்கையோ அன்று"***

***(ஞா. மாணிக்கவாசகன் (உ.ஆ) 2016, பா. அடிகள்,122-125)***

***கல் நீராட்டுதல்***

*கல் என்பது இவ்விடத்தில் நடுகற்களைக் குறிக்கும். இக்கல்லை புனித நீரில் நீராடியப் பிறகு தான் நடுவர்.*

*சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு சிலை எடுக்க இமயவரை சென்று பகைவர்களோடு போரிட்டு வெற்றி பெறுகின்றான். அவ்வெற்றியின் அடையாளமாக அக்கல்லை கனக விசயர் தலையில் ஏற்றிக்கொண்டு புனித நீரில் நீராட்டி தூய்மைப்படுத்தினான்.*

*நடுகல் நடுவதற்கு சாதாரண கற்களை கொணடுவராமல் சிறப்புமிக்க உயர்ந்த இடத்திலிருந்து கொண்டு வந்து அதை நீராடி வழிபட்டனர் என்பதன் மூலம் நடுகல்லின் சிறப்பினை அறியமுடிகின்றது. பொதுவாக நடுகல் போரில் வீரமரணம் அடைந்த மறவர்களுக்கு நடப்படும். ஆனால் இங்கு தன் கணவனுக்காக வாதாடி நீதியை நிலைநாட்டி வானுலகம் அடைந்த பத்தினிக் கடவுளான கண்ணகிக்கு கல் எடுக்கப்பட்டது. மறவர்க்கு நடுபடும் நடுகல் இங்கு புரட்சிப் பெண்ணுக்கு நடப்பட்டது என்பதன் மூலம் அன்றைய கால வேந்தர்களின் ஆட்சிமுறையையும், தமிழர்களின் பண்பாட்டினையும் அறிந்து கொள்ள வழிகோல்கின்றது.*

***"கங்கைப் பேர்யாற்றுக் கரையகம் புகுந்து***

***பாற்படு மரபில் பத்தினிக் கடவுளை***

*நூற்றிறன் மாக்களின் நீர்ப்படை செய்து”*

*(ஞா. மாணிக்கவாசகன், 2016)*

*மேற்குறிப்பிட்டுள்ள செய்தியின் மூலம் நடுகல் என்பது பழந்தமிழகமக்களின் வீரத்தை வெளிப்படுத்தும் அடையாளமாகச் சின்னமாக கருதப்பட்டுள்ளது என்பதை அறயி முடிகின்றது. சங்க காலத்தில் மட்டுமல்லாது இக்காலத்திலும் முன்னறிவிப்பு இல்லா, நடைபெறும் போர் இயற்கைச் சீற்றங்கள் போன்ற காரணங்களால் உயிர்விட்ட வீரர்களின் வீரத்தியாகத்தை நினைக்கும் பொருட்டு நடுகல் நட்டு மலர்தூவி வழிபடுவதை இன்னும் காணமுடிகின்றது என்பதன் மூலம் நடுகல் வழிபாடு என்பது பண்டைத் தமிழர்கள் மேற்கொண்ட போர் முறைகளில் ஒன்றாகும்.*

**முடிவுரை**

*நாடாளும் வேந்தன் தம் எதிரி நாட்டு வேந்தனோடு போர் தொடுப்பதற்கு முன் என்னென்ன உத்திகளை கையாண்டு உள்ளான் என்பதை எடுத்துரைத்து, அவை என்னென்ன என்பதை தனித்தனியாக விளக்கப்பட்டுள்ளது. சேரன் செங்குட்டுவன் புரட்சிப் பெண்ணான கண்ணகிக்கு சிலை எடுப்பதற்காக வடநாடு நோக்கிச் செல்வதற்கு முன்பு நிமித்தம் பார்க்கறான். பிறகு தம் படை வீரர்களுக்கு மட்டுமல்லாமல் பஞ்சபாண்டவர், கௌரவர்களுக்கு இடையே நடந்த பாரதப்போரில் அவர்கள் இருவருக்கும் பெருஞ்சோற்று அளித்த கொடையினைப் பற்றி பெசப்பட்டுள்ளது. தமது வலிமையைக் கண்டு அஞ்சி நடுங்கிய மன்னர்கள் திறைப்பொருள் கொடுத்த தன்மை இடம் பெற்றுள்ளது. பகைவரோடு போரிடுவதற்கு முன் அவனை போரில் வென்று தமக்கு அடிப்பணியச் செய்வேன் என்று வஞ்சினம் கூறுதல் தமிழகத்திலேயே கல் எடுக்காமல் வடநாடு நோக்கிப் பயணித்து அவர்களோடு போரிட்டு வெற்றியும் அடைந்து, இமயமலையில் கல் எடுத்து அதனை கனகவிசயர் தலையில் ஏற்றிக்கொண்டு வந்து புனித நீரில் நீராட்டி, வழிபட்டனர் என்பதை அறியமுடிகின்றது.*

*ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள வஞ்சிக்காண்டத்தில் பழந்தமிழகத்தை சீரும் சிறப்பாக நடுவுநிலை தவறாமல் செங்கோல் ஆட்சி புரிந்த சேரன்செங்குட்டுவன் மேற்கொண்ட போர் முறையை இக்கட்டுரையானது தெளிவுற எடுத்துக்காட்டியுள்ள தன்மையை காணமுடிகின்றது.*

## மேற்கோள்கள்


1. *இளம்பூரணர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2000*
2. *சோமசுந்தரனார், பொ. வே. புறப்பொருள் வெண்பாமாலை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2000*
3. *மாணிக்கவாசகன், ஞா. சிலப்பதிகாரம், உமாபதிப்பகம், 2016.*
4. *மாணிக்கவாசகன், ஞா. புறநானூறு, உமாபதிப்பகம், 2005.*